# வணிகவியல் சரியான விடையை தேர்ந்தெடுக்கும் வினாக்கள்

1. கூட்டாண்மை ஏற்படுவது ...........................................

(அ) சட்டத்தின்படி ஆ) வெளிப்படுத்திய உடன்படிக்கையின் படி

இ) வெளிப்படை அல்லது உட்கிடை உடன்படிக்கையின்படி

ஈ) வம்சாவழி சொத்துரிமையின் படி

2. ஒரு பன்னாட்டு நிறுமம் ................................ என அழைக்கப்படுகிறது

அ) உலக அளவில் பெரியது ஆ) கூட்டாண்மை

இ) கூட்டுறவு சங்கங்கள் ஈ) பொது கூட்டுரு

3. கூட்டுறவுச் சங்கம் தொடங்கப்படுவது .....................................

அ) கிராமங்களில் மட்டும் ஆ) கிராமங்களிலும் நகரங்களிலும்

இ) பெரு நகரங்கள் மட்டும் ஈ) நகர்புறங்களில் மட்டும்

4. பின்வரும் சிறப்பியல்புகளில் எது தனி வணிகருக்கு ஏற்றதல்ல?

அ) தனிநபர் உரிமை ஆ) தனி மனித கட்டுப்பாடு

இ) எல்லா இலாபமும் வணிகருக்கு ஈ) நெகழ்ச்சி தன்மையற்றது

5. ஒரு குடும்பத்தில் பிறப்பின் மூலம் உறுப்புமை ஏற்படுவது .......................

அ) தனி வணிகர் ஆ) இந்து கூட்டு குடும்ப வணிகம்

இ) கூட்டுறவு சங்கம் ஈ) கூட்டாண்மை

6. பதிவு கட்டாயமாக்கப்பட்டுள்ள அமைப்பு ........................

அ) தனி வணிகர் ஆ) கூட்டாண்மை

இ) கூட்டுப் பங்கு நிறுமம் ஈ) இந்து கூட்டு குடும்பம்

7. அரசு நிறுமத்தின் பங்கு முதலீடு ........................... க்கு குறையாமல் இருக்க வேண்டும்

அ) 75% ஆ) 60% இ) 95% ஈ) 51%

8. கூட்டுறவு அமைப்பில் .......................

அ) ஒரு பங்கு ஒரு வாக்கு முறை கடைபிடிக்கப்படுகிறது

ஆ) ஒரு நபர் ஒரு வாக்கு முறை கடைபிடிக்கப்படுகிறது

இ) ஒரு நபருக்கு இரு வாக்குரிமைகள் உண்டு

ஈ) பங்குகள் மாற்றியல்பு தன்மை கொண்டவை

9. பாதுகாப்பு தொழிற்சாலைகளுக்கு ஏற்ற உகந்த தொழில்துறை அமைப்பு

அ) அரசு நிறுமம் ஆ) பொதுக் கூட்டுரு அமைப்பு

இ) துறைமுறை அமைப்பு ஈ) வாரிய அமைப்பு

10. "எல்லாம் அவரே அவரே எல்லாம்" இக்கோட்பாட்டின்படி இயங்கும் அமைப்பு ............

அ) தனியாள் வணிகம் ஆ) பொதுக் கூட்டுரு அமைப்பு

இ) துறைமுறை அமைப்பு ஈ) வாரிய அமைப்பு

11. தமிழ்நாடு மின்சார வாரியம் ............................................ க்கு எடுத்துக்காட்டாகும்.

அ) அரசு நிறுமம் ஆ) பொதுக் கூட்டுரு அமைப்பு

இ) துறைமுறை அமைப்பு ஈ) வாரிய அமைப்பு

12. தனியாள் வணிக அமைப்பிற்கு ஏற்றத் தொழில்கள் ..............................

அ) பேரளவு வியாபாரம் ஆ) நடுத்தர வியாபாரம்

இ) சிற்றளவு வியாபாரம் ஈ) இவையேதுமில்லை

13. “தனிநபர் கட்டுப்பாடு உலகிலேயே சிறந்தது” என்று கூறியவர் ...................................

அ) ஒ.ஆர்.கிருஷ்ணசாமி ஆ) வீலர்

இ) வில்லியம் ஆர்.பேசட் ஈ) ஜேம்ஸ் ஸ்டீஃபன்சன்

14. ........................................ தொழிலமைப்புகளின் மிகப் பழமையான வடிவமாகும்

அ) தனியார் வணிக முறை ஆ) கூட்டாண்மை

இ) கூட்டுப் பங்கு நிறுமம் ஈ) கூட்டுறவுச் சங்கம்

15. தனியாள் வணிகரின் பொறுப்பு ..............................

அ) முதலுக்கு ஏற்ப வரையறுக்கப்பட்டது

ஆ) சொத்துக்கு ஏற்ப வரையறுக்கப்பட்டது

இ) வரையறையில்லாதது

ஈ) கூட்டு – தனித்தனி

16. தனியாள் வணிகம் துவங்க ......................................

அ) குறைந்தது இரு நபர்கள் தேவை ஆ) குறைந்தது ஏழு நபர்கள் தேவை

இ) ஒரு நபர் மட்டும் தேவை ஈ) குறைந்தது பத்து நபர்கள் தேவை

17. தனியாள் வணிகத்தின் முடிவெடுப்பது

அ) விரைவாக ஆ) தாமதமாக

இ) மிக தாமதமாக ஈ) கலந்தாலோசித்து

18. கூட்டாண்மை உண்டாக்கப்படுவது ............................

அ) ஒப்பந்தத்தால் ஆ) கூட்டாளிகளிடையே உறவு

இ) அரசின் வழிகாட்டல் ஈ) இவையனைத்தும்

19. கூட்டாண்மை பதிவு .............................

அ) கட்டாயம் ஆ) விருப்பத்தின்பேரில்

இ) அவசியமில்லை ஈ) இவையேதுமில்லை

20. கூட்டாண்மை நிறுவனம் பதிவு செய்தல் .........................

அ) 1949 சட்டம் ஆ) 1956 சட்டம் இ) 1932 சட்டம் ஈ) 1942 சட்டம்

21. கூட்டாண்மையின் கூட்டாளிகளுக்கிடையே உள்ள உறவு முறை ..........................

அ) கடனாளி மற்றும் கடனீந்தோர் ஆ) முதல்வர் மற்றும் முகவர்

இ) விற்பவர் மற்றும் வாங்குபவர் ஈ) வேலை தருபவர்

22. ஒவ்வொரு கூட்டாளியும் தொழிலுக்கு வழங்கிய கடன் மற்றும் முன்பணம் மீது ஆண்டுக்கு .................... வட்டி பெற உரிமை உண்டு

அ) 6% ஆ) 10% இ) 12% ஈ) வட்டியில்லை

23. கூட்டாண்மை ............................ ஆல் உருவாக்கப்படுகிறது

அ) இயற்கை உறவு ஆ) பரஸ்பரம் அன்பு

இ) பிரியம் ஈ) ஒப்பந்தம்

24. கூட்டாண்மையில் உள்ள கூட்டாளிகளை ஒட்டுமொத்தமாக ................ என்றழைக்கின்றோம்.

அ) நிறுமம் ஆ) குடும்பம் இ) நிறுவனம் ஈ) கூட்டுறவுச் சங்கம்

25. கூட்டாண்மையின் அடிப்படைக்கூறு ....................

அ) பூரண நல்ல நம்பிக்கை ஆ) முதலீட்டிற்கான தொகை இருத்தல்

இ) கூடித் தொழில் செய்ய விருப்பம் ஈ) இடர்பாட்டில் பங்கேற்பு

26. கூட்டாண்மையில் வங்கித் தொழில் செய்ய அதிகபட்ச நபர்கள் ..................

அ) 2 ஆ) 10 இ) 20 ஈ) 30

27. கூட்டாண்மையில் தோன்றும் உறவுமுறை .........................

அ) முதல்வர் மற்றும் முகவர் ஆ) உரிமையாளர் மற்றும் வேலையாளர்

இ) எஜமானர் மற்றும் பணியாளர் ஈ) கடனாளர் மற்றும் கடனாளி

28. உறங்கும் கூட்டாளி இவ்வாறு அழைக்கப்படுவர் ..................

அ) உழைக்கும் கூட்டாளி ஆ) உழையாக் கூட்டாளி

இ) பெயரளவுக் கூட்டாளி ஈ) முரண்தடைக் கூட்டாளி

29. .................... முகமைக் கோட்பாட்டின் விரிவாக்கம் என்று வர்ணிக்கப்டுகிறது

அ)கூட்டாண்மை ஆ) தனியாள் வணிகம்

இ) கூட்டுப்பங்கு நிறுமம் ஈ) கூட்டுறவுச் சங்கம்

30. முதலீடு செய்து தொழிலை நிர்வகிக்கும் பொறுப்பேற்றுள்ள கூட்டாளி ............

அ) உறங்கும் கூட்டாளி ஆ) பெயரளவு கூட்டாளி

இ) மேலாண்மை கூட்டாளி ஈ) இலாபத்தில் மட்டும் பங்கேற்கும் கூட்டாளி

31. பொது வரையறை நிறுமத்தில் குறைந்த அளவு உறுப்பினர்களின் எண்ணிக்கை ..................

அ) 2 ஆ) 3 இ) 7 ஈ) 10

32. நிறுமங்கள் சட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணை A என்பது ..........

அ) நிகழ்ச்சிக் குறிப்பேட்டின் மாதிரி

ஆ) இருப்புநிலைக் குறிப்பின் மாதிரிப் படிவம்

இ) நிறுமச் செயல் முறை விதிகளின் மாதிரி

ஈ) நிறும அமைப்பு முறையேட்டின் மாதிரி

33. ஒரு நிறுமத்தின் கடனீட்டுப் பத்திரதாரர்கள் என்பார் அதன்..................

அ) கடனாளர்கள் ஆ) உறுப்பினர்கள்

இ) கடன் வாடிக்கையர் ஈ)நிறுமத்தில் கடன்

34. தகவலறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கும் குறைந்தளவு பங்கெடுப்பைக் கீழ்கண்ட நாட்களுக்குள் ஒரு பொது நிறுமம் பெற வேண்டும் ................

அ) 90 நாட்கள் ஆ) 120 நாட்கள் இ) 130 நாட்கள் ஈ) 60 நாட்கள்

35. பங்குகளை ஒறுப்பிழப்பு செய்யக் காரணம் .............

அ) நிறுமத்திற்குச் செலுத்த வேண்டிய கடன்தொகையை செலுத்த மறுத்தல்

ஆ) தொடர்ந்து நிறுமத்தின் 3 ஆண்டுப் பொதுக் கூட்டங்களில் கலந்து கொள்ளாமல் இருப்பது

இ) அழைப்புப் பணத்தைச் செலுத்தத் தவறுவது

ஈ) ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் வன்முறைச் செயல்களில் ஈடுபடுதல்

36. கீழ்கண்டவற்றுள் எது நாடாளுமன்ற அல்லது மாநிலச் சட்டமன்றங்கள் இயற்றிய சட்டத்தின் மூலம் உருவாக்கப்படுகிறது ?

அ) பட்டய (சாசன) நிறுமம் ஆ) அயல்நாட்டு நிறுமம்

இ) அரசு நிறுமம் ஈ) சட்டமுறை நிறுமம்

37. தனி வரையறு நிறுமம் என்பது .............. தொழில் தொடங்கலாம்

அ) தொழில் கூட்டுருவாக்கச் சான்றிதழ் பெற்றவுடன்

ஆ) தொழில் தொடக்கச் சான்றிதழ் பெற்றவுடன்

இ) பதிவாளரிடமிருந்து தான் தேர்ந்தெடுத்துள்ள நிறுமப் பெயருக்கு ஒப்புதல் கிடைத்தவுடன்

ஈ) பதிவாளரிடம் நிறும அமைப்பிற்குரிய அனைத்து ஆவணங்களையும் தாக்கல் செய்த பின்னர் தொழில் தொடங்கலாம்

38. கீழ்கண்ட நிறுமங்களுள் எது பதிவாளரிடம் தகவலறிக்கைக்கு மாற்றறிக்கையை தாக்கல் செய்ய வேண்டும் ?

அ) பங்கு வெளியீடு மூலம் பொதுமக்களிடமிருந்து பங்கு முதல் திரட்டும் ஒரு பொது வரையறு நிறுமம்

ஆ) தன் இயக்குநர்கள் மற்றும் அன்னாரின் உறவினர்களிடமிருந்து முதல் தொகை ஏற்பாடு செய்திருக்கும் ஒரு பொது வரையறு நிறுமம்

இ) ஒரு தனி வரையறு நிறுமம்

ஈ) இவை அனைத்து நிறுமங்களுமே

39. பங்குகளை வட்டத்தில் வெளியிட்டிருக்கும்பொழுது, பங்கொன்றின் முகமதிப்பு ரூ.100 எனில், அனுமதிக்கப்படும் உயர்ந்தளவு வட்டம் ..............

அ) ரூ.5 ஆ) ரூ.10 இ) ரூ.20 ஈ) ரூ.15

40. தனி வரையறு நிறுமத்தில் பங்குதாரரின் பொறுப்பு .............

அ) பங்குகளின் செலுத்தப்பெற்ற மதிப்பளவாகும்

ஆ) பங்குகளின் மீது செலுத்தப் பறாதிருக்கும் மதிப்பளவாகும்

இ) தனிப்பட்ட சொத்துக்களின் அளவாகும்

ஈ) பங்குகள் மீது கோரப்பட்டத் தொகை அளவாகும்

41. ஒரு நிறுமத்தின் செயற்பாட்டு எல்லையைக் கீழ்கண்ட ஆவணங்களுள் எது உணர்த்துகிறது ?

அ) நிறுமத்தின் அமைப்பு முறையேடு ஆ) நிறுமச் செயல் விதிகள்

இ) தகவலறிக்கை ஈ) சட்டமுறை உறுதி

42. நிறுமமொன்றின் வாழ்வுக் காலம் முடிவுக்கு வருவது எப்பொழுது எனில் ...........

அ) அதன் தோற்றுவிப்பாளர்கள் அனைவரும் இறந்தவுடன்

ஆ) அதன் இயக்குநரவையில் உள்ள இயக்குநர்கள் அனைவரும் இறந்தவுடன்

இ) முதலில் இருந்த மிகவும் அதிகமான உறுப்பினர்கள் தங்கள் பங்குகளை பிறருக்கு மாற்றிக் கொடுத்துவிட்டால்

ஈ) மேற்சொன்ன எச்சூழ்நிலையிலும் முடிவுக்கு வராது

43. ஒரு நிறுமத்தின் கடனீட்டுப் பத்திரதாரர்கள் என்போர், அதன் ...............

அ) கடனாளர்கள் ஆ) உறுப்பினர்கள்

இ) கடன் வாடிக்கையாளர் ஈ) வாங்கியோர் கடன்

44. முன்னுரிமைப் பங்கு முன்னுரிமை பெற்றிருப்பது ......................

அ) பங்காதயம் பெறுவதில் மட்டும்

ஆ) நிறுமம் கலைப்பிற்குள்ளாகி முதலைத் திருப்பித் தரும்பொழுது மட்டும்

இ) வாக்குரிமையைச் செலுத்துவதில்

ஈ) பங்காதயம் பெறுவதிலும், நிறுமம் கலைப்பின் போது பங்கு முதலைத் திரும்பப் பெறுவதிலும்

45. ஒரு பொதுவரையறு நிறுமத்தில் இயக்குநர் ஒருவர் வைத்திருக்க வேண்டிய தகுதிப் பங்குகளின் மதிப்பு .......................

அ) ரூ.5000–க்கு ஆ) ரூ.5,00,000–க்கு

இ) ரூ.50,000–க்கு ஈ) ரூ.500–க்கு

46. நிறுமச் செயலர் ஒருவர் ......................... நியமிக்கப்படுகிறார்

அ) அரசால் ஆ) இந்திய நிறுமச் செயலர்கள் அமைப்பால்

இ) இயக்குநர் அவையால் ஈ) ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் பங்குநர்களால்

47. ஒரு இயக்குநர் ..............................

அ) நிறுமத்தின் முகவராக (Agent)

ஆ) நிறுமத்தின் பொறுப்பாண்மையர் அல்லது நம்புறுதியாண்மையராக (Trustee)

இ) நிறுமத்தின் முதன்மை நிர்வாக அதிகாரியாக

ஈ) மேற்சொன்ன அனைத்துமாகச் செயலாற்றுகிறார்.

48. ..............................எண்ணிக்கைக்கு மிகாத பொது வரையறு நிறுமங்களில் ஒரே நேரத்தில் ஒரு நபர் இயக்குநர் பதவி வகிக்கலாம்.

அ) 10 ஆ) 15 இ) 20 ஈ) வரம்பில்லை

49. கூட்டத்தில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளின் வரிசையே ................ என்று கூறப்படுகிறது

அ) நிகழ்ச்சி நிரல் ஆ) நிகழ்ச்சி குறிப்பு இ) தீர்மானம் ஈ) குறைவெண்

50. தகுதி பெற்ற நிறுமச் செயலரை நியமித்தல் கீழ்கண்டவற்றில் எந்நிறுமத்திற்குக் கட்டாயமாக்கப்பட்டுள்ளது ?
செலுத்தப் பெற்ற பங்கு முதல்

அ) ரூ.5,00,000–க்குக் கூடுதலாக இருக்கும் நிறுமம்

ஆ) ரூ.50,00,000–க்குக் கூடுதலாக இருக்கும் நிறுமம்

இ) ரூ.25,00,000–க்குக் கூடுதலாக இருக்கும் நிறுமம்

ஈ) ரூ.15,00,000–க்குக் கூடுதலாக இருக்கும் நிறுமம்

51. இரு பொது ஆண்டுக் கூட்டங்கட்கு உள்ள இடைவெளி ................

அ) 15 மாதங்கட்கு மேல் செல்லக்கூடாது

ஆ) 12 மாதங்கட்கு மேல் செல்லக்கூடாது

இ) 18 மாதங்கட்கு மேல் செல்லக்கூடாது

ஈ) 20 மாதங்கட்கு மேல் செல்லக்கூடாது

52. கீழ்கண்ட நிறுமங்களுள் எது சட்டமுறைக் கூட்டத்தை கூட்ட வேண்டும்

அ) சட்டமுறை நிறுமங்கள் ஆ) தனிவரையறை நிறுமங்கள்

இ) பொது வரையறை நிறுமங்கள் ஈ) பட்டய நிறுமங்கள்

53. பொது வரையறு நிறுமத்தில் ஒட்டுமொத்த மேலாண்மை ஊதியம் .............

அ) நிகர இலாபத்தில் 11%

ஆ) செலுத்தப்பெற்ற முதல் மற்றும் பொதுக் காப்பிறுப்புத் தொகையில் 11%

இ) நிகர இலாபத்தில் 5%

ஈ) செலுத்தப்பெற்ற முதல் மற்றும் பொதுக் காப்பிருப்புத் தொகையில் 5%

54. ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் கீழ்கண்டவற்றுள் எந்நடவடிக்கை வழக்கமாக மேற்கொள்ளப்பட மாட்டாது ?

அ) தணிக்கையர் நியமனம் ஆ) கடனீட்டுப் பத்திர வெளியீடு

இ) பதவி விலகுமிடத்திற்கு இயக்குநர்களை நியமித்தல் ஈ) பங்காதாயம் விளம்பப்படல்

55. ஒரு நிறுமத்தின் முதலாவது இயக்குநர்கள் .................. நியமிக்கப்படுகின்றனர்

அ) சட்ட முறைக் கூட்டத்தில் உறுப்பினர்களால்

ஆ) முதலாவது ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் உறுப்பினர்களால்

இ) நிறுமச் செயல்முறை விதிகளில் பெயர் குறிப்பிடப்படுவதால்

ஈ) நிறுமப் பதிவாளரால்

56. எச்சரிக்கையான ஊக வணிகர் .................... எனப்படுவர்

அ) கலைமான் ஆ) காளை இ) முடவாத்து ஈ) கரடி

57. இந்தியாவிலுள்ள ஏற்பிசைவு பெற்ற பங்கு மாற்றகங்களின் எண்ணிக்கை ..................

அ) 20 ஆ) 21 இ) 22 ஈ) 24

58. இது புதிய நிறுமங்களின் முதல் விடுப்புகளை வெளியிடும் ......................

அ) முதன்மைச் சந்தை ஆ) இரண்டாம் நிலை சந்தை

இ) பொருட்கள் சந்தை ஈ) ஒழுங்குமுறை விற்பனை சந்தை

59. எல்லாம் நன்மையாகவே நடைபெறும் என்ற மனப்பாங்கு கொண்டவர் ...............

அ) காளை ஆ) கரடி இ) கலைமான் ஈ) முடவாத்து

60. பத்திர ஒப்பந்த (ஒழுங்குபடுத்துதல்) சட்டம் இவ்வாண்டு நிறைவேற்றப்பட்டது

அ) 1952 ஆ) 1956 இ) 1964 ஈ) 1966

61. புதிய பங்குகளை விற்க வழக்கமாகப் பயன்படுத்தும் முறை

அ) பொது வெளியீடு ஆ) விற்பனைக்கான தருமொழி

இ) மேலாண்மைத் தரகர்கள் ஈ) ஒப்புறுதியளித்தல்

62. எதிலும் கெட்டதையே காண்கின்ற மனப்பாங்கு கொண்டவர் ..................

அ) கலைமான் ஆ) கரடி இ) காளை ஈ) முடவாத்து

63. பங்கு மாற்றகங்கள் இதில் ஈடுபட்டிருக்கின்றன

அ) சரக்கு ஆ) சேவை இ) நிதிப் பத்திரங்கள் ஈ) நாட்டின் பணம்

64. பங்கு மாற்றகங்கள் இவற்றின் வணிகத்தை அனுமதிக்கிறது

அ) நிறுமத்தின் எல்லா பங்குகளையும் ஆ) அரசால் வெளியிடப்படுகின்ற பிணையங்கள்

இ) பட்டியலிடப்பட்ட பத்திரங்கள் ஈ) பட்டியலிடப்படாத பத்திரங்கள்

65. ஒரு காளை ஊக வணிகர் இதை நம்புகிறார்..................

அ) விலைகள் உயருதல் ஆ)விலைகள்குறையும்

இ) நிலையான விலைகள் ஈ) விலையில் மாற்றமேதும் இருக்காது

66. பங்கு மாற்றகம் பங்குகளின் ஊக வாணிகத்தை ..............

அ) அனுமதிப்பதில்லை ஆ) ஊக்கப்படுத்துவதில்லை

இ) ஊக்கப்படுத்துகிறது ஈ) தடை செய்யும்

67. தன் வணிகர்கள் (Jobber) பங்கு மாற்றங்களில் இவர்களுக்கான வாணிகத்தில் ஈடுபடுகிறார்கள் ..................

அ) தங்களுடைய வாடிக்கையாளர்களுக்காக

ஆ) தங்களுடைய சொந்த நடவடிக்கைகளுக்காக

இ) மற்ற தரகர்களுக்காக

ஈ) மற்ற உறுப்பினர்களுக்காக

68. சபைத் தலைவருடன் சேர்ந்து செபியில் (SEBI) எவ்வளவு உறுப்பினர்கள் உள்ளனர்?

அ) 5 ஆ) 7 இ) 6 ஈ) 8

69. செபி இச்சட்டப்படி உருவாக்கப்பட்டது .................

அ) பத்திரங்கள் ஒப்பந்த (ஒழுங்குபடுத்துதல்) சட்டம் ஆ) இந்தியப் பத்திர மற்றும் மாற்றங்கள் வாரியச் சட்டம்

இ) நிறுமங்கள் சட்டம் ஈ) இந்திய அரசியல் சாசனம்

70. ஒரு கூட்டுறவுச் சிறப்பங்காடி அளிப்பது ....................

அ) கடன் ஆ) சேவை இ) சரக்குகள் ஈ) ரொக்கம்

71. கூட்டுறவில் குறைந்தபட்ச உறுப்பினர்களின் எண்ணிக்கை .................

அ) 2 ஆ) 7 இ) 10 ஈ) 25

72. மத்திய கூட்டுறவு வங்கி தொடங்கப்படுவது ....................

அ) கிராமங்களில் ஆ) மாவட்டத் தலைநகரங்களில்

இ) மாநிலைத் தலைநகரங்களில் ஈ) நகர்ப்புறங்களில்

73. கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினர்களின் உச்ச அளவு ..................

அ) 50 ஆ) 60 இ) 100 ஈ) வரையறை இல்லை

74. முதன்முதலில் நுகர்வோர் கூட்டுறவு வெற்றிகரமாக விளங்கிய நாடு .................

அ) இங்கிலாந்து ஆ) அமெரிக்கா இ) சுவிட்சர்லாந்து ஈ) இந்தியா

75. சிறுபான்மையினர் நலத்தைப் பாதுகாக்கும் தொழிலமைப்பு ........................

அ) தனிவாணிகம் ஆ) பொதுக்கழகம்

இ) கூட்டுறவுச் சங்கங்கள் ஈ) பொது நிறுமம்

76. கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினர்களின் பங்குகள் .......................

அ) மாற்ற முடியும் ஆ) திருப்பிச் செலுத்தக் கூடியது

இ) திருப்பிச் செலுத்த முடியாது ஈ) இவற்றில் ஏதும் இல்லை

77. கூட்டுறவுச் சங்கம் தொடங்கப்படுவது ....................

அ) கிராமங்களில் மட்டும் ஆ) கிராமங்களிலும், நகரங்களிலும்

இ) பெரு நகரங்களில் மட்டும் ஈ) நகர்ப்புறங்களில் மட்டும்

78. பொதுமக்களும் இந்த நிறுவனத்தின் பங்குகளை வாங்கலாம் .....................

அ ) துறைவாரி அமைப்பு ஆ)பொதுக்கழகம்

இ) அரசு நிறுமம் ஈ) மேற்கூரிய நிறுவங்கள் ஏதுமில்லை

79. பொதுக் கழகத்தின் நிருவாகம் இதைப் பெற்றிருக்கிறது

அ) வரையறுக்கப்பட்ட சுதந்திரம் ஆ) செயல்பாட்டுச் சுதுந்திரமின்மை

இ) கூட்டுப்பாட்டுடன் கூடிய சுதந்திரம் ஈ) வரையறுக்கப்படாத செயல் சுதந்திரம்

80. அரசு நிறுமத்தில் அரசு கொண்டிருக்க வேண்டிய குறைந்தபட்சப் பங்கு முதல் .............

அ) 51 விழுக்காடு ஆ) 60 விழுக்காடு

இ) 75 விழுக்காடு ஈ) 90 விழுக்காடு

81. பொதுக் கழகத்தினை மேலாண்மை செய்வது .............

அ) இயக்குநரவை ஆ) அரசு அலுவலர்கள்

இ) இயக்குநர்கள் ஈ) இயக்குநர்கள் கமிட்டி

82. அரசு நிறுமம் இவற்றின் கீழ்ப் பதிவு செய்யப்படுகிறது

அ) மைய அல்லது மாநில அரசின் தனிச்சட்டம் ஆ) இந்திய நிறுமச் சட்டம் 1956

இ) அரசியல் அமைப்பு சாசனம் ஈ) அரசாணை

83. இந்திய தொலைபேசித் தொழிற்சாலை ................ நிறுவனமாகும்

அ) துறைவாரி அமைப்பு ஆ) பொது கூட்டுரு இ)

அரசு நிறுமம் ஈ) இவற்றுள் ஏதுமில்லை

84. அரசுத் தொழில்கள் மிகச் செம்மையாக இயங்குவதற்கு மிகவும் உகந்தது எனப் பொதுவாகக் கருதப்படும் வடிவமைப்பு ......................

அ) துறைவாரி அமைப்பாகும் ஆ) பொதுக் கழகமாகும்

இ) அரசு நிறுமமாகும் ஈ) கூட்டுப் பங்கு நிறுமமாகும்

85. அரசு தொழில்களின் வடிவமைப்புகளில் மிகவும் தொன்மையானது ...................... ஆகும்

அ) அரசு நிறுமம் ஆ) பொதுக்கழகம்

இ) அரசு துறைவாரி அமைப்பு ஈ) இவையனைத்தும்